31.01.2025

O.S.No.280/2016

வா.சா.1.திருமதி.ஜானகி க.பெ. கிருஷ்ணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை

வழக்குரைக்கும் நிருபண வாக்குமூலத்திற்கும் விபரம் கூறியது நான் தான். நத்தம் நிலவரி திட்டத்திற்கு முன்பு தாவா சொத்து சர்வே எண். 107/4C ல் கட்டுப்பட்டிருந்தது. அதற்கான பட்டா 1 ம் பிரதிவாதியின் முன்னோர்கள் பெயரில் இருந்தது. அந்த பட்டாவை நான் பார்க்கவில்லை. 1 ம் பிரதிவாதியின் முன்னோர் பெயரில் பட்டா இருந்தது என்பது எதன் அடிப்படையில் நான் சொல்லுகிறேன் என்றால் 1 ம் பிரதிவாதி இளைய சகோதரர் நல்லமணி என்பவர் அவரது தந்தை பெயரில் பட்டா இருந்தாக என்னிடம் கூறியதன் அடிப்படையில் நான் அவ்வாறு கூறினேன். UDR க்கு முன்பே 1 ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா தாக்கல் ஆகியிருந்தது என்றால் சரியல்ல. UDR க்கு பின்பு தாவா சொத்து சர்வே எண். 105/4C ல் கட்டுப்பட்டிருந்தது.

2. அந்த சொத்து 1 ம் பிரதிவாதி பழனியாண்டி பெயரில் இருந்தது. அது அவர்களது பொது குடும்ப சொத்து. தாவா சொத்து சதுரமாக இருந்ததா, செவ்வகமாக இருந்ததா, முக்கோணமாக இருந்ததா என்றால் சதுரமாக தான் இருந்தது. தாவா சொத்தை துரைபாண்டி மகன் பழனிகுமாரிடம் இருந்து கிரையம் பெற்றேன். மேற்படி பழனிகுமார், சின்னான வெள்ளையன் அம்பலம் மகனும், 1 ம் பிரதிவாதியின் இளைய சகோதரருமான நல்லமணி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார். தாவா சொத்தை பொறுத்தான நல்லமணி, பழனிகுமாருக்கு எழுதிக் கொடுத்த அசல் ஆவணத்தை பழனிகுமார் எனக்கு கிரையம் கொடுத்தபோது என்னிடம் ஒப்படைத்துவிட்டதாக வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான்.

3. நல்லமணி, பழனிகுமாருக்கு கிரையம் எழுதிக் கொடுக்கவில்லை என்றாலும் பழனிகுமாருக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கிரைய ஆவணத்தில் நல்லமணி கையெப்பம் இல்லை என்றாலும் அந்த அசல் ஆவணத்தை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்படி உண்மை சங்கதி தெரியவரும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல எனக்கு அந்த ஆவணம் தேவைப்பட்டதால் என் கைவசம் வைத்திருந்தேன் தற்போது அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். தாவா சொத்து நல்லமணி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்பதை காட்டுவதற்கு எந்த பதிவு ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. ஆனால் அவர்கள் வாய்கராலாக பிரித்து கொண்டார்கள்.

4. தாவா சொத்தை பொறுத்து நல்லமணி பெயரில் ஒருபோதும் பட்டா ஏற்படவில்லை என்றால் அவர் பெயரில் பட்டா இருந்தது இல்லை. நல்லமணி தாவா சொத்தை அனுவவித்து வந்ததாக காண்பிப்பதற்கு அவர் பெயரில் கிஸ்தி ரசீதுகளோ, அடங்கல் கணக்கோ நான் தாக்கல் செய்யவில்லை

என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து நல்லமணி குடும்பத்தார் இடையே 30.04.1993 தேதியில் வாய் மொழி பாகம் ஏற்பட்டதாக நான் கூறுவது பொய்யான சங்கதி என்றாலும் அவ்வாறு பாகம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரித்தாக சொல்லப்படுவது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. ஆனால் அவர்கள் பாகம் பிரித்து கொண்டது உண்மை. எனது நிருபண வாக்குமூலத்தில் 13.06.1994 தேதியில் ஒரு பதிவில்லாத பாகபிரிவினை பத்திரம் எழுதிக் கொண்டதாக நான் சொல்லியுள்ளது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. அவ்வாறு பதிவு இல்லா பத்திரம் எழுதப்பட்டதா என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. ஆனால் அவர்கள் எழுதிக் கொண்டார்கள்.

5. நான் கிரையம் வாங்கியதற்கு முன்பு 1993, 1994 ல் நல்லமணி குடும்பத்தார் இடையே ஏற்பட்டதாக சொல்லப்படும் பாகபிரிவினை சம்மந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. எனக்கு கிரையம் கொடுத்தபோது நல்லமணி குடும்பத்தார் இடையே 1993, 1994 ல் ஏற்பட்ட பாகபிரிவினையை கட்டுப்படுத்தி எனக்கு கிரையம் எழுதிக் கொடுத்தன் அடிப்படையில் எனக்கு தெரியும். வா.சா.ஆ 2 ஆவணத்தில் 30.04.1993 ல் நல்லமணி குடும்பத்தார் இடையே வாய்மொழி பாகம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதே போல் எனது கிரைய ஆவணத்தில் 13.06.1994 தேதியிட்ட பதிவில்லா பாகபிரிவினை பத்திரத்தில் அசலை ஒப்படைத்தாக காணப்படவில்லை என்றால் சரிதான், அந்த அசல் ஆவணம் என்னிடம் கொடுக்கவில்லை, 1 ம் பிரதிவாதி வசம் உள்ளது நகல் மட்டும் என்னிடம் கொடுத்தார்கள் என் கைவசம் உள்ளது.

6. அவ்வாறு மேற்படி பதிவில்லா பாகபிரிவினை பத்திரம் அசல் 1 ம் பிரதிவாதி கைவசம் இருப்பதாக அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி எங்கள் தரப்பில் மனு தாக்கல் செய்து, I.A.No.209/2018 ல் பிறப்பித்த உத்தரவின் படி 27.09.2018 ல் முழு விசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 13.06.1994 தேதியில் பதிவில்லா பாகபிரிவினை பத்திரம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், அவ்வாறு ஒரு பத்திரமே இல்லை என்றாலும் இந்த வழக்கிற்காக 13.06.1994 ல் பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்டதாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரியான முத்திரை கட்டணம் செலுத்தி பதிவு செய்யப்படாததால் மேற்சொன்ன பதிவு செய்யப்படாத பாகபிரிவினை பத்திரத்தின்படி தாவா சொத்தில் நல்லமணிக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல.

7. தாவா சொத்தை நல்லமணி எந்த காலத்திலும் உரிமையாளராக இருந்து அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உரிமையும் அனுபவமும் இல்லாத நல்லமணி என்பவரிடம் இருந்து வா.சா.ஆ 2 ஆவணம் மூலம் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் பழனிகுமார் என்பவருக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் பாத்தியமும் ஏற்படாது என்றால் சரியல்ல. பழனிகுமார் வா.சா.ஆ 2 ஆவணப்படி நல்லமணியிடம் இருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்படுவது 02.09.1996 என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை கட்டுப்படுத்தி தான செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ 6 எழுதிக் கொடுத்த தேதி 24.06.2000 என்றால் சரிதான். நான்

வா.சா.ஆ 1 ஆவணப்படி பழனிகுமாரிடம் இருந்து 03.08.2011 ல் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

8. தாவா சொத்தை 1 ம் பிரதிவாதி 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ 6 ஆவணப்படி 24.06.2000 - த்தில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்தபின்பு தான் அதை தெரிந்து கொண்டு மோசடியாக 03.08.2011 ல் பழனிகுமாரிடம் இருந்து தாவா சொத்தை நான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. எனது முன் கிரயதாரர் பழனிகுமார் 1996 - லேயே கிரயம் பெற்றுவிட்டதால் அந்த கிரய ஆவணத்தின் அடிப்படையில் நான் கிரயம் பெற்றேன். 1 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் பழனிகுமார் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றாலும், எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கில் பழனிகுமாரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

9. நான் தாவா சொத்தை கிரயம் பெறுவதற்கு முன் 1 ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு எவ்வித வியாஜ்ஜியமூலம் கிடையாது என்றால் சரியல்ல. நான் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை பழனிகுமார் அனுபவித்து வந்தார் என்று காண்பிப்பதற்கு எவ்வித வருவாய் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**(**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதியில் ஒத்தி வைக்கப்படுகிறது**)**